6. பயங்கரவாதத்தின் நிறம் காவி!

இந்தத் தலைப்பில் இருக்கும் ஆச்சரியக் குறி உண்மையில் தேவையற்றது. காவி பயங்கரவாதம் அல்லது ஹிந்து பயங்கரவாதம் என்பது ஒன்றும் புதிதானதோ ஆச்சரியகரமானதோ அல்ல.

ஆனால் பயங்கரவாதத்தின் நிறம் இஸ்லாமியர்கள் பயன்படுத்தும் பச்சை அல்லது இடதுசாரிகளின் சிவப்பு என்று மட்டுமே நம் மனங்களில் பத்திரிகைகளும் ஊடகங்களும் நீண்ட காலமாகப் பதியவைத்து வந்திருக்கின்றன. காவியையும் பயங்கரவாதத்தையும் தொடர்புபடுத்தியதே இல்லை.

காவி, சிவப்பு, பச்சை எல்லாமே நல்ல நிறங்கள். மனிதர்களின் தவறுக்காக நாம் நிறங்களை இழிவுபடுத்துகிறோம்.

இந்த வாரம்தான் சில ஆங்கில செய்தி சேனல்கள் பயங்கரவாதத்தின் நிறம் காவியாக மாறுகிறது என்றெலாம் தலைப்பிட்டு செய்தித் தொகுப்புகள் வழங்கியிருக்கின்றன.

காரணம் மாலேகாவ்ன். மகாராஷ்டிர மாநிலத்தில் நாசிக் மாவட்டத்தில் இருக்கும் இந்தச் சிறுநகர் மதக் கலவரங்களுக்கும் மோதல்களுக்கும் குண்டு வெடிப்புகளுக்கும் தொடர்ந்து பெயர் வாங்கிய இடம். 2006ல் இஸ்லாமியர் வாழும் பகுதிகளிலும் மசூதி, கல்லறைப் பகுதிகளிலும் சைக்கிள்களில் வைக்கப்பட்ட குண்டுகள் வெடித்ததில் 37 பேர் இறந்தார்கள். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர். இந்த கொடூரத்துக்கு காரணமானவர்கள் என்று சொல்லி இஸ்லாமிய மாணவர் அமைப்பான சிமி உறுப்பினர்களை காவல் துறை கைது செய்தது.

இப்போது ஒரு மாதம் முன்பு செப்டம்பர் 29 அன்று மோட்டார் சைக்கிளில் வைத்த குண்டு வெடிப்பில் ஆறு பேர் இறந்தனர். சுமார் 30 பேருக்கு காயம் ஏற்பட்டது.

இந்தக் கொடூரத்தை செய்தவர்கள் ஹிந்து பயங்கரவாதிகள் என்று இப்போது காவல் துறை அறிவித்திருக்கிறது. கைதாகியிருக்கும் நால்வரில் ஒருவர் பெண் ‘சாது’ !

சாத்வி பூர்ண சேத்னானந்த் கிரி (வயது 38) இரு வருடம் முன்பு சந்நியாசினி ஆனவர். அதற்கு முன் ப்ரத்ஞா சிங்காக இருந்தபோது விஸ்வ ஹிந்து பரீஷத் அமைப்பில் பொறுப்பில் இருந்தார். அதற்கு முன்னால் 18 வருட காலம் பி.ஜே. பியின் மாணவர் பிரிவான அகில பாரத வித்யார்த்தி பரீஷத்தில் உறுப்பினராக இருந்தவர். மீதி நான்கு கைதிகளும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர். குண்டு வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் சாத்விக்கு சொந்தமானது.

மாலேகாவ்னில் குண்டு வெடித்த அதே நேரத்தில் குஜராத்தில் மொடாசா என்ற ஊரிலும் மோட்டார் சைக்கிள் குண்டு வெடித்தது. அங்கே 16 வயது சிறுவன் இறந்தான். பத்து பேர் காயமடைந்தனர். இந்தக் கொடூரத்திலும் சாத்வி கோஷ்டிதான் தொடர்புடையது என்று காவல் துறை கருதுகிறது. இரு நிகழ்ச்சிகளிலும் ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்து பயன்பட்டிருக்கிறது.

விஸ்வ ஹிந்து பரீஷத், பஜ்ரங் தளம் போன்ற பல்வேறு ஆர்.எஸ்.எஸ் அவதாரங்களையெல்லாம் மீடியா அதிகபட்சமாக மதவாத அமைப்புகள் என்று சொல்லுமே தவிர, பயங்கரவாத அமைப்புகளாக வர்ணித்ததில்லை. வெடிகுண்டு, ஆர்.டி.எக்ஸ் கொடூரங்கள் செய்பவர்கள் முஸ்லிம் பயங்கரவாதிகள்தான் என்ற கருத்தையே மீடியா பரப்பி வந்திருக்கிறது.

ஆனால் ஆயுதப் பயிற்சி முதல் வெடிகுண்டு தயாரிப்பு வரை பல சம்பவங்களில் ஆர்.எஸ்.எஸ் அவதாரங்கள் ஈடுபட்ட செய்திகள் வெளிவந்தபோதும் அவை அடக்கி வாசிக்கப்பட்டன. 2006ல் மகாராஷ்டிரத்தில் நாந்தெத் நகரில் ஆர்.எஸ்.எஸ் பிரமுகரும் ஓய்வு பெற்ற அரசு எஞ்சினீயருமான லஷ்மண் ராஜ்கொண்டவார் வீட்டில் குண்டு வெடித்ததில் அவர் மகனும் இன்னொரு ஆர்.எஸ்.எஸ் ஊழியரும் இறந்தார்கள். நான்கு பேருக்கு காயம் ஏற்பட்டது. காயமடைந்த ஒருவர் தப்பி ஓடி பின்னர் கைதானார். எல்லாரும் வெவ்வேறு ஊர்களைச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ் ஊழியர்கள்.

ஆகஸ்ட் 2008ல் கான்பூரில் குண்டு தயாரித்துக் கொண்டிருக்கும்போது ராஜீவ் மிஸ்ரா, பூபேந்திர சோப்ரா என்ற இரு ஆர்.எஸ்.எஸ் ஊழியர்கள் வெடிவிபத்தில் இறந்தார்கள். சுமார் நான்கைந்து வருடங்களாகவே மகாராஷ்டிராவில் இஸ்லாமியர்களின் மசூதிகளுக்கருகே குண்டுகள் வெடித்த பல நிகழ்ச்சிகளில், ஆர்.எஸ்.எஸ்சின் வெவ்வேறு அவதார புருஷர்கள் சம்பந்தப்பட்டிருப்பது காவல் துறையால் கண்டுபிடிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலேயே தென்காசியில் ஆர்.எஸ்.எஸ் அலுவலக குண்டு வெடிப்பு நிகழ்ச்சியில், குண்டு வைத்ததே ஆர்.எஸ்.எஸ்சின் தமிழக அவதாரமான இந்து முன்னணிதான் என்பது அம்பலமாகிவிட்டது. ரவி பாண்டியன் என்ற இந்து முன்னணிக்காரரும் இன்னும் 7 இந்து முன்னணியினரும் இதில் கைதானார்கள். 2002ல் ஈரோடு மாவட்டத்தில் சதுமுகை என்ற கிராமத்தில் அம்மன், விநாயகர், முனீஸ்வரன் சிலைகள், கோவில்கள் நாசப்படுத்தப்பட்டன. இதை செய்தது பெரியார் திராவிடர் கழகத்தினர் என்று காவல் துறையில் மாவட்ட இந்து முன்னணியினர் அதிகாரப் பூர்வமாகப்

புகார் செய்தார்கள். கடைசியில் துப்பு துலக்கியதில் நாசவேலை செய்ததே இந்து முன்னணியைச் சேர்ந்த செல்வகுமார், மஞ்சுநாதன் என்ற இருவர்தான் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இது போன்ற செய்திகள் சில சமயம் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளிலும் வந்தாலும், அவற்றுக்கு தொப்பியும் தாடியும் வைத்த பயங்கரவாதிகள் சம்பந்தமுள்ள நிகழ்ச்சிகளுக்கு சமமான முக்கியத்துவம் தரப்படுவதில்லை. இஸ்லாமிய சிமி அமைப்பினர் கைதுகள் எல்லா தினசரிகளிலும் 4 காலம், எட்டு காலம் தலைப்புகள், முதல் பக்க செய்திகள். சாத்வி பூர்ண சேத்னானந்த் கிரி கைது ஒரு தினசரியிலும் முதல் பக்கத்தில் இல்லை. உள்ளேயும் சின்னதாக ஒரு மூலையில். ஹிந்து மத வெறி அமைப்பினர் கைதாகும்போதெல்லாம் யாரும் ஹிந்து பயங்கரவாதம் என்று வர்ணிப்பதே இல்லை.

தவிர பயங்கரவாதம் என்பது வெடிகுண்டும் ஆர்.டி.எக்ஸும் துப்பாக்கித் தாக்குதலும் மட்டுமா ? மனித மனங்களுக்குள் துவேஷத்தை வளர்ப்பது, அதை வளர்ப்பதற்காக வன்முறையில்லாமலே எல்லா விஷமங்களையும் செய்வதும் பயங்கரவாதம்தான். தன் வீட்டுக்குத் தானே தீ வைத்துக் கொண்டு பங்காளி மீது பழி போடுவது முதல், ஒருவர் கைதானதும் அவர் எங்கள் அமைப்பில் இல்லை எப்போதோ விலகிவிட்டார் என்று சமாதானம் சொல்வது வரை எல்லாமே விஷமமான உத்திகள்தான். காந்தியைக் கொல்வதற்கு முன்பாக கோட்சே ஆர்.எஸ்.எஸ்சிலிருந்து விலகியதும் இஸ்மாயில் என்று கையில் பச்சை குத்திக் கொண்டதும் ஒன்றும் கருத்து வேறுபாட்டால் விலகவில்லை. அது ஒரு விஷமத்தனமான உத்தி.

மதவெறி பயங்கரவாதம் பல வருடங்களாக இந்தியாவில் இருந்து வருகிறது. சமணர்-சைவர் பகை, இஸ்லாம் - இந்து மதங்கள், கிறித்துவம்- இந்து மதங்கள் மோதல்களை விடப் பல நூற்றாண்டுகள் முந்தையது. மேலை நாடுகளில் மத வெறி என்பது அரசியல் ஆட்சி நிர்வாக அமைப்பிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னர்தான் அங்கே இன்று காணப்படும் பொருளாதார, வாழ்வியல் மேம்பாடுகள் ஏற்பட்டன.

இந்தியாவில் அரசியலுடன் மதத்தைப் பிணைப்பதையே கோட்பாடாகக் கொண்டு இயங்கிய ஹிந்து மகாசபாவின் தொடர்ச்சியாகவே ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி முதல் முஸ்லிம் லீக், அல் உமா வரை பார்க்க வேண்டும்.

தமிழ் நாட்டில் இந்து முன்னணியும் பிள்ளையார் ஊர்வலங்களும் 90களில் வருவதற்கு முன்னால் அல்-உமா இல்லை. ஒரு மதத்தில் இயங்கும் மதவெறி அமைப்புதான் இன்னொரு மதத்தின் மதவெறி அமைப்பை போஷித்து வளர்க்கும் சத்துணவு.

இன்று மதவெறியர்களின் பயங்கரவாதத்தின் முகம் மாறி வருகிறது. பாபர் மசூதியை இடிக்கத் திரண்ட கும்பலின் முகங்களைப் பார்த்தாலே தெரியும். படிப்பறிவு இல்லாமல், அடித்தட்டு வாழ்க்கையில் பொருளாதார நலிவுற்ற முகங்கள். இந்த முகங்களுக்கும் இஸ்லாமிய பயங்கரவாதிகளாகக் கைதாகும் முகங்களுக்கும் வேறுபாடுகள் இல்லை. ஒரே வேறுபாடு தொப்பியும் தாடியும்தான். ஏழ்மையும் படிப்பறிவின்மையும் பொதுத் தன்மைகள்.

ஆனால் நாம் எப்போதும் எய்தவர்களை விட்டுவிட்டு அம்புகளையே துரத்திக் கொண்டு இருக்கிறோம். மத வெறி பயங்கரவாதத்தின் அசல் முகம் இந்த அம்புகளல்ல. இரு தரப்பிலும் அடிமட்ட தொண்டர்களை உணர்ச்சிவசப்படுத்தி நாச வேலைகளுக்கு மூளைச் சலவை செய்து அனுப்பி வைக்கும் முகங்கள், வளமான சொந்த வாழ்க்கை உடையவை. பெரும் பல்கலைக்கழகங்களில் உயர்படிப்பு படித்து நவீன தொழில் நுட்ப அறிவுடன் இயங்கும் முகங்கள். முகத்தைப் பார்த்து இவர்கள் பயங்கரவாதிகள் என்று சொல்ல முடியாத முகமூடிகள் அணிந்த முகங்கள். வள்ளுவர் இதைத்தான் மக்களே போல்வர் கயவர் என்று குறித்திருக்கிறார்.

இன்று இணைய தளத்தில் ஒரு வாரம் உலவினால் போதும். இந்த முகங்களை தரிசித்துவிடலாம். ஹிந்த்துத்துவா, பெரியாரியம், தமிழ் தேசியம், இஸ்லாமிய சர்வதேசியம், முழுமுச்சான முதலாளித்துவம், அதி தீவிர மார்க்சியம், என்று பல வகைக் கோட்பாடுகளை முன்வைக்கும் குரல்களின் ஊடே கலந்து ஒலிக்கும் பயங்கரவாதக் குரல்கள்ளும் உண்டு. எழுதக் கூசும் வசைச் சொற்கள் முதல் எல்லா கேவலமான உத்திகளையும் கருத்துப் பரப்பலுக்காகப் பயன்படுத்தும் குரல்களின் சொந்தக்காரர்களின் முகங்கள் நேர்த்தியானவை. அமைதியானவை. உயர் படிப்பும் தொழில் நுட்ப அறிவும் இணைந்த மூளைகளை சுமக்கும் முகங்கள்.

பல பத்திரிகை, ஊடக அலுவலகங்களில் நான் சந்தித்திருக்கும் உயர் பொறுப்பினரில் சிலரின் தனிப் பேச்சுக்களில் மத, சாதி வெறிகள் எப்போதும் இழையோடுகின்றன. அவரவர் சாமர்த்தியத்துக்கு ஏற்ப இது பேச்சில் நாசூக்காகவோ, அல்லது கொச்சையாகவோ வெளிப்படும்.

பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்கள் இவைதான். நம் மனங்கள்தான். மீண்டும் வள்ளுவரைத்தான் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. மனத்துக் கண் மாசிலன் ஆதல்தான் முதல் தேவை. மாசு படிந்த மனங்கள்தான் பயங்கரவாதத்தின் விதைகள்.

பயங்கரவாதத்துக்கென்று தனி நிறம் ஏதுமில்லை. அது ஒரு பச்சோந்தி. எல்லா நிறங்களிலும் வரும். அது காட்டுவது நிறமே அல்ல. கறை.

இந்தக் கறையை நீக்கக்கூடிய ஒரே சோப்புத்தூள், மதம்-கடவுள் முதலியவற்றை அதிகபட்சம் வீட்டுக்குள்ளே மட்டும் வைத்துக் கொள்ளும் சமூகத்தை உருவாக்குவதுதான். உடனடியான தேவை பாரபட்சம் இல்லாமல் எல்லா மதங்களின் வெறி அமைப்புகளையும் தடை செய்யும் நடவடிக்கைதான். இதை ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பியிலிருந்து தொடங்க வேண்டும்.

சிறந்த நடிகர் விருது:

அடுத்த சில மணி நேரங்களில் தன் காவல் துறையால் கைது செய்யப்பட இருக்கும் இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோரை மனிதச் சங்கிலி அணி வகுப்பில் பார்த்துக் கையசைத்துவிட்டுச் சென்ற முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிக்கு.

பூச்செண்டு:

தாய், மனைவி, மகள் என்று எல்லா கட்டத்திலும் நம் குடும்பப் பெண்களை எவ்வளவு கொடூரமாக நடத்துகிறோம் என்று அப்படி நடத்தும் ஆண்கள் சார்பாக மன்னிப்பு வாக்குமூலத்தை அளித்த நடிகர்எழுத்தாளர் சிவகுமாருக்கும், அதை ஒளிபரப்பிய விஜய்.டிவிக்கும் இ.வா.பூச்செண்டு.

குட்டு:

ஓமந்தூரார் தோட்டத்தில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் தமிழக அரசின் சட்டமன்ற-தலைமைச்செயலக வளாகத்துக்கு பார்ப்பன புரோகிதர்களைக் கொண்டு வைதிக முறைப்படி பூமி பூஜை நடத்தியிருக்கும் மஞ்சள் துண்டு, பெரியார் விருது புகழ் முதலமைச்சருக்கும் அவர் சகா துரைமுருகனுக்கும் இதைச் செய்த அனைத்து அதிகாரிகளுக்கும் இ.வா.குட்டு. அரசு என்பது அனைத்து மத நம்பிக்கையினருக்கும் நம்பிக்கையற்றோருக்கும் பொதுவான அமைப்பு. அதன் நிகழ்ச்சிகளில் எந்த மதச் சடங்கும் நிகழ்த்தப்படக் கூடாது.

வருத்தம் :

தென் மாவட்டங்களில் கடந்த 4 வருடங்களில் 300 பெண் குழந்தைகளைத் தங்களுக்கு வேண்டாம் என்று பெற்றோர் நிராகரித்து அரசுத் தொட்டிலில் போட்டுவிட்ட செய்தி அறிய வருத்தம்.

25.10.2008

9. மனசாட்சியுடன் ஓர் உரையாடல்
அல்லது ரத்தம் ஒரே நிறம். ஜாதி ?

நேரே பலரும் ரகசியமாகப் பேசுகிற விஷயத்துக்கே வந்துவிடுவோம். சென்னை அம்பேத்கர் அரசினர் சட்டக் கல்லூரியில் மாணவர்கள் நடத்திய வன்முறை தலித் ஜாதியினரின் வெறியைத் தானே காட்டுகிறது ?

அப்படித்தான் அது நுட்பமாக சித்திரிக்கப்படுகிறது. சம்பவம் நடந்த அன்று மாலை நான் சந்தித்த ஒரு சாதாரண ஆட்டோ டிரைவர் முதல் படித்த வசதியான அரசு ஊழியர் வரை அந்தக் கருத்தை என்னிடம் எதிரொலித்தார்கள். ....பசங்களுக்கு ரொம்ப எடம் குடுத்துட்டோம் என்ற தொனியிலேயே பலரும் தாழ்ந்த குரலில் பேசினார்கள். நம் சமூகத்தில் பல பிரிவினர்களிடமும் அடிமனதில் இன்னும் தலித் விரோத உணர்ச்சி ஆழமாகப் பதிந்திருப்பதை டி.வி. காட்சிகள் உசுப்பி விட்டன. இது மிக மிகக் கவலைக்குரிய நிலை. சட்டக் கல்லூரி சம்பவத்தில் தலித் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்பது உண்மை. ஆனால் அது முழு உண்மையல்ல.

முழு உண்மை என்ன ?

முழு உண்மை என்பது அன்றைய சம்பவத்துடன் முடிவது அல்ல. அதைத் தாண்டியும் செல்லக் கூடியது. அதை சந்திக்கும் நேர்மை நமக்கு வேண்டும். படிப்படியாகப் பார்ப்போம். அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவர்களில் ஒரு பிரிவினர் தங்கள் ஜாதித் தலைவரான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் ஜெயந்தியைக் கொண்டாடுகிறார்கள். அதற்கான சுவரொட்டிகளில் கல்லூரியின் பெயரில் உள்ள அம்பேத்கர் பெயர் வேண்டுமென்றே விடப்படுகிறது. இதனால் தலித் மாணவர்கள் எரிச்சலடைய இரு தரப்புக்கும் இடையில் நடந்த விவாதங்கள் மோதலாகின்றன. வன்முறை தினத்தன்று தேவர் மாணவர்களும் தலித்தல்லாத மாணவர்களும் ஆயுதம் எடுக்கிறார்கள். தலித்துகளும் ஆயுதம் தூக்குகிறார்கள். எண்ணிக்கை பலம் அன்றைய தினம் தலித் மாணவர்கள் பக்கம் இருந்ததால் கத்தியை விட கம்பு வலுவானதாகி, எதிர் தரப்பு மாணவர்கள் கடும் கொடூர தாக்குதலுக்குள்ளானார்கள். எண்ணிக்கை பலம் மாறியிருந்தால், இதே போன்றக் கொடூரத் தாக்குதலை தலித் மாணவர்கள் அனுபவித்திருப்பார்கள். இதுதான் சம்பவத்தின் முழு உண்மை.

சம்பவத்தைக் கடந்து செல்லும் முழு உண்மை என்ன ?

சம்பவம் தொடர்பான இரண்டு கேள்விகளுக்கு பதில் தேடினால் முழு உண்மையை நோக்கிப் போய்விடலாம். 1. தேவர் ஜெயந்தியை ஏன் கல்லூரி மாணவர்கள் கொண்டாட வேண்டும் ? 2. கல்லூரியின் பெயரில் இருக்கும் அம்பேத்கர் பெயரை ஏன் தவிர்க்க வேண்டும் ?

ஏன் ?

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஒரு சமூக, அரசியல் தலைவர் என்பதில் சந்தேகமில்லை. குற்றப் பரம்பரைச் சட்டம் என்ற கொடூரமான பிரிட்டிஷ் காலச் சட்டத்தை ஒழிப்பதிலும் சுதந்திரப் போராட்ட ஈடுபாட்டிலும், நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பெயரைத் தமிழகத்தில் பரவச் செய்ததிலும் அவருடைய பங்களிப்பு கணிசமானதுதான். ஆனால் அவர், ஜாதிகளுக்கு அப்பாற்பட்ட பொதுத் தலைவராக சமூகத்தில் இடம் பிடிக்கவில்லை. ஜாதி மோதல்கள் ஏற்படும்போதெல்லாம், அவர் ஒரு சார்பாகவே செயல்பட்டது என்பது வரலாற்றில் தெளிவாக இருக்கிறது. அதனால்தான் முதுகுளத்தூர் கலவரத்தின்போது காமராஜர் அவரைக் கைது செய்ததை, ஜாதி உணர்வுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவரான பெரியார் வரவேற்றார். தலித் சமத்துவ எதிர்ப்பாளராகவே தேவர் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

அப்படியானால் பொதுவான கொண்டாட்டத்துக்கு உரிய தலைவர் எனபவர் யார் ?

காந்தியிடமிருந்து இதைப் புரிந்துகொள்ளலாம். காந்தியுடன் அம்பேத்கர், நேதாஜி, பெரியார் மூவருக்கும் கடும் கருத்து வேறுபாடுகள் இருந்தன. தலித் விடுதலைக்காக காந்தி முன்வைத்த திட்டம் எதுவும் அம்பேத்கருக்கு உடன்பாடானதல்ல. ஆனால் காந்தியை ஒரு போதும் தலித்துகளை வெறுப்பவராகவோ, எதிர்ப்பவராகவோ, தலித்துகள் மீது பகையுணர்ச்சி கொண்டவராகவோ அவரும் தலித்துகளும் கருதியதில்லை. காந்தியை நிராகரித்த தலித்துகளுக்கு சமமாகவும் அதிகமாகவும் காந்தியை ஏற்றுக் கொண்ட தலித்துகள் உள்ளனர். ஆனால் அப்படிப்பட்ட நிலையில் ஒருபோதும் தேவர் இருக்கவில்லை. எனவே அவரது ஜெயந்தியைக் கொண்டாடுவது என்பது எல்லா ஜாதி மாணவர்களுக்குமான பொது அம்சம் அல்ல.

ஆனால் அம்பேத்கர் சமூகத்தில் எல்லாராலும் கொண்டாடப்படவேண்டியவர் என்கிறீர்களா ?

ஆம். ஏனென்றால் அவர் காந்தியைப் போல, பொதுவான மனித சமத்துவத்தை நாடியவர். புத்தர் அம்பேத்கரைக் கவர்ந்ததற்குக் காரணம் இந்த சமத்துவ வேட்கைதான். தலித்தல்லாதவர்களுக்கு எதிரான விரோத உணர்ச்சியை வளர்த்து அதன் மூலம் இதர ஜாதிகளை ஒடுக்கி, தலித் விடுதலையை அடைய வேண்டும் என்று அம்பேத்கர் சொல்லவில்லை. கல்வி, சுயமரியாதை இரண்டின் மூலமும் தலித் விடுதலையை சாதிக்க அம்பேத்கார் முயற்சித்தார். மேல் ஜாதியினரின் மனசாட்சியுடன் பேச காந்தி முயற்சித்துக் கொண்டிருந்தார். தேவர் இந்த தளங்களில் இயங்கியவர்

அல்ல. காந்தியைப் போல பொது மனிதராகக் கொண்டாடப்பட வேண்டிய அம்பேத்கர் பெயரைத் தங்கள் சுவரொட்டியில் ஒரு மாணவர் குழு தவிர்ப்பது என்பதே ஜாதி துவேஷ மனப்பான்மையைக் காட்டுகிறது. அதுவும் அவர் உருவாக்கிய அரசியல் சட்டத்தைப் படித்துத் தேறி அதைக் கொண்டே நாளைக்கு வேலை செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் மாணவர்கள் இப்படி நடந்து கொள்வது அருவெறுப்பானது.

மாணவர் மனங்களில் இப்படிப்பட்ட துவேஷம் எங்கிருந்து உருவாகிறது?

இது அவர்கள் கண்டுபிடித்த புதிய துவேஷம் அல்ல. பல தலைமுறைகளாக கிராமங்களில் தாய்ப் பாலோடு சேர்த்து ஊட்டப்பட்டு வரும் ஜாதி உணர்ச்சியின் விளைவே இது.

அப்படியானால் இவ்வளவு துவேஷமுள்ள மாணவர்கள் தாக்கப்பட்டது சரி என்று சொல்வீர்களா?

ஒருபோதும் இல்லை. எல்லா வன்முறையும் அருவெறுக்கத்தக்கதுதான். யார் யாரை அடிக்கிறார்கள் என்ற வேறுபாடுகள் ஒரு கட்டத்துக்கு மேல் அர்த்தமற்றவை. துளியும் மனிதத் தன்மை அற்ற மனநிலையில்தான் இப்படிப்பட்ட வன்முறை சாத்தியம். அந்த மன நிலைக்கு இளம் உள்ளங்கள் தள்ளப்பட்டுவிட்டது பெரும் வேதனையாக எனக்குப் படுகிறது. இன்னொரு மனிதனை கம்பாலும் இரும்புக் குழாயாலும் நையப் புடைத்த கைகளை விட, கத்தியால் வெட்டித் தள்ள துடித்த கைகளை விட அதிகம் ஆபத்தானவை அந்தக் கைகளை இயக்கிய மனங்கள்தான்.

அந்த மனங்களை உருவாக்கியது யார் ?

நாம்தான். நம் சமூகத்தின் மிக முக்கிய சக்திகளான நான்கு சக்திகளும் இதற்குப் பொறுப்பு. ஒன்று அரசியல். இரண்டாவது சினிமா. மூன்றாவது ஜாதி. நான்காவது குடும்பம்.

நான்கும் எப்படிப் பொறுப்பு என்று விளக்க முடியுமா?

ஜாதி அமைப்பு, அடுக்கு முறையில் மேலிருந்து கீழ் வரை ஒவ்வொருவரும் அடுத்திருப்பவரை நசுக்கும் அமைப்பு. மிக சிறிய வயதிலேயே இந்த ஜாதி வேறுபாட்டையும் ஒடுக்குவதையும் ஒடுக்கப்படுவதையும் தம் இயல்புகளாக ஏற்றுக் கொள்ள பிஞ்சு மனங்களை நம் குடும்பம் பயிற்றுவிக்கிறது. நீ இன்ன ஜாதியில் பிறந்திருக்கிறாய். அதன் விதிகளுக்கேற்ப நடந்துகொள் என்று குழந்தையிலிருந்தே மௌனமாகவும் பிராக்டிகலாகவும் குடும்பம் நமக்கு போதிக்கிறது. எந்த ஜாதி என்பதைப் பொறுத்துத் தனக்குக் கிடைக்கும் மரியாதைகளையோ அவமானங்களையோ சகஜமாக கேள்வியேதும் கேட்காமல் ஏற்றுக் கொள்ளும் இயல்பைக் குடும்பம் குழந்தைகளுக்கு ஏற்படுத்தி விடுகிறது. அவரவர் ஜாதி 'அந்தஸ்து' க்குரிய திமிரோ, பெருமிதமோ, கூச்சமோ, அடிமைத் தனமோ இயல்பாக்கப்படுகிறது.

இதிலிருந்தெல்லாம் நம்மை விடுவிக்க வேண்டிய பொறுப்பு யாருடையது ?

அந்தப் பொறுப்பு அரசியலுக்கும் கல்விக்கும் கலைக்கும் உரியது. கல்வி

முதல் காவல் துறை வரை அனைத்தையும் கட்டுப்படுத்துவது அரசியல்தான். ஆனால் இங்கே இருக்கும் அரசியல் கட்சிகள், தலைமைகள் எல்லாம், ஒரு சில விதி விலக்குகள் தவிர, கேவலமானவை. பதவிசுகம், சுயநலம், இதற்குத் தேவைப்படும் ஓட்டுக்காக எதையும் செய்யத் தயாராயிருப்பவை. நமக்கு உழைப்பதற்காகவே பதவிக்கு வருவதாக நம்மை சாமர்த்தியமாக ஏமாற்றும் தந்திரசாலிகள். முழுப் பொய்களைச் சொல்லவே மாட்டார்கள். எப்போதும் அரை உண்மைகளையே பேசுவார்கள்.

ஜாதி வெறி உணர்ச்சியை வளர்ப்பதில் கட்சிகளின் பங்கு என்ன ?

ஓட்டுக்காக ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு ஜாதியின் அபிமானத்தைப் பெறுவதற்காக பல வேலைகளை செய்கிறார்கள். உதாரணமாக தேவர் ஜெயந்தி, குருபூஜை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஒவ்வொரு கட்சிப் பிரமுகரும் போட்டி போட்டுக் கொண்டு செல்வது கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாக நடக்கிறது. குறிப்பாக அ.தி.மு.க தேவர்கள் கட்சி என்ற பெயர் எடுத்ததும், தி.மு.க அதை உடைத்து தேவர்கள் ஓட்டைப் பெறப் போட்டி போடுகிறது. வெவ்வேறு ஜாதி சங்கங்கள் தங்களை அரசியல் கட்சிகளாகவே மாற்றிக் கொள்கின்றன. ஜாதிகளுக்கு அப்பாற்பட்டு மக்கள் ஆதரவை திரட்டும் வலிமையை இழந்து வரும் பெரிய கட்சிகள், ஓட்டுக்காக ஜாதிக் கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து அவற்றை வளர்த்துவிடுகின்றன.

மாணவர்களுக்கு தனி விடுதிகள், தலித் மாணவர்களுக்கு தனி விடுதிகள் என்று அரசு ஏற்படுத்தியதே மிகப் பெரிய வரலாற்றுப் பிழை. கிராமத்தில் ஊர், சேரி (காலனி) என்று பிரித்ததன் தொடர்ச்சியே இது. சேரன்மாதேவி குருகுலத்தின் தீண்டாமையை எதிர்த்த பெரியாரின் பாரம்பரியத்துக்கு, திராவிட இயக்க ஆட்சி துரோகம் செய்துவிட்டது என்றே சொல்லலாம். (இந்த விடுதிகளின் படு அவலமான நிலை தனிக்கதை. மனித ஜீவிதத்தையே கேவலப்படுத்தும் விதத்தில் இவற்றை நடத்திவரும் அதிகாரிகள், ஆட்சியாளர்களுக்கெல்லாம் அந்தமான் சிறையில் ஆயுள் தண்டனை விதிக்கலாம்.) பொது விடுதிகளில்தான் எல்லா மாணவர்களும் இருக்க வேண்டும். அங்கேதான் எல்லாருக்கும் சமத்துவம் கற்பிக்கப்படவேண்டும். தனியார் கல்லூரிகளில் பெருமளவு சாத்தியமாகும் இதனை, அரசுத் துறையில் செய்யத் தவறிவிட்டதற்கு அரசியல் கட்சிகளே பொறுப்பு.

பொறுப்பு தவறியதில் கலையின் பங்கு என்ன ?

இங்கே பெருமளவு ஆதிக்கம் செலுத்தும் கலை சினிமா. நிலப் பிரபுத்துவ காலத்து ஜாதிப் பெருமைகளை தமிழ் சினிமா கடந்த 20 வருடங்களில் அதிகமாகப் பேசியிருக்கிறது. இன்னொரு பக்கம் கண்மூடித்தனமான வன்முறைக் காட்சிகள். இந்தப் படங்களை மண்ணின் மணம் கமழ்பவை, தமிழ்ப் பண்பாட்டை சித்திரிப்பவை என்று பொய்யாகப் புகழ்வது, வன்முறைக் கலாசாரத்தை கௌரவப்படுத்தியிருக்கிறது. புதிதாக வரும் ஒவ்வொரு இளம் நடிகனும் மென்மையாக நடித்துப் பெயரெடுத்த அடுத்த நொடியே ரவுடி, பொறுக்கியாக மட்டுமே நடிக்க விரும்புகிறான். அதுதான் அவன் ரேட்டை லட்சத்திலிருந்து கோடிகளுக்கு உயர்த்துமாம்.

இதெல்லாம் பொழுதுபோக்குதானே? படத்தைப் பார்த்து வன்முறை பெருகிவிடாது; வாழ்க்கையில் இருக்கும் வன்முறையைத்தான்

நாங்கள் காட்டுகிறோம் என்று சினிமாக்காரர்கள் சொல்கிறார்களே ?

அருவெறுக்கத்தக்க வன்முறையை ரசிக்கத்தக்கதாக மாற்றுவதுதான் இவர்களுடைய கலை செய்யும் ஆபத்து. பொறுக்கியை கண்டிப்பதற்கு பதிலாக ரசிப்பது சீரழிவுக்கே வழி. மிகக் கொடூரமான வன்முறையை விவரமாகக் காட்டும்போது, இளம் மனங்கள் அதற்குப் பழகிப் போகின்றன. நிறையப் பார்க்கப் பார்க்க, மரத்துப் போகின்றன. இதனால் நேரில் ரத்தம் கொட்டுவதைப் பார்க்கும்போது பதற்ற உணர்ச்சி இல்லாமற் போய்விடுகிறது. வன்முறை பற்றி மனம் மரத்துப் போவதுதான் மிக ஆபத்தானது.

சட்டக் கல்லூரி வன்முறைக் காட்சிகளை டி.வியில் பார்த்துவிட்டு பதறுபவர்களில் பெரும்பாலோர் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான். (அல்லது வன்முறை மிகுந்த படங்களைப் பார்க்காத இளம்பெண்கள்.) இளைஞர்களைப் பொறுத்த மட்டில் இந்த வன்முறைக் காட்சிகளை பெரிய சலனம் இல்லாமல், சினிமாவில் பார்த்த வன்முறைக் காட்சிகளோடு ஒப்பிட்டுக் கூட பேசிக் கொண்டிருந்தார்கள்.

இது பெரிய ஆபத்து இல்லையா ?

ஆம். கத்தி, கம்பு எடுத்துத் தாக்குபவனின் வன்முறையை விட, அதை ரசிப்பவன், அதை ஆதரித்து, அறையில் இருந்துகொண்டு பேசுபவன், தான் ஒருபோதும் ஆயுதமெடுத்துத் தாக்கப் போவதில்லை என்றாலும் அதை சரியென்பவன் ஆகியோரின் வன்முறை இன்னும் ஆபத்தானது. உடல் மீது தாக்குதல் நடத்துவது மட்டும் வன்முறை அல்ல. சக மனிதனின் உள்ளத்தின் மீது கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் நடத்தும் வன்முறை மிகக் கொடியது. ரெட்டை கிளாஸ் டீக்கடையில் கூச்சமின்றி மேல் ஜாதி டம்ளரில் டீ குடிப்பதும் வன்முறைதான். பத்து வயது சிறுவன் டேபிள் துடைக்கும் ஓட்டலில் நம் எட்டு வயது மகளுடன் போய் சாப்பிடுவதும் வன்முறைதான். ஒரு சமூக அநீதியில் நம் ஜாதி, நம் மதம், நம் மொழியினர், நம் அன்புக்குரிய தலைவர் சம்பந்தப்பட்டிருந்தால் அதற்காக வாய் மூடியிருப்பதும் நாம் இழைக்கும் வன்முறைதான்.

சட்டக்கல்லூரியில் போலீஸ் வாய்மூடியிருந்ததும் அப்படிப்பட்ட வன்முறைதானே ?

ஆம். எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாத அநீதி அது. மேலிருந்து அரசியல் உத்தரவு வந்திருந்தால், அதை போலீசார் விசாரணைக் கமிஷன் முன்பு பகிரங்கப்படுத்த வேண்டும். கல்லூரிக்குள் நுழைய பிரின்சிபால் அனுமதியோ அழைப்போ வேண்டும் என்பது சட்ட விதியே அல்ல. காவல் அதிகாரிகள் பிரின்சிபாலிடம் போய் இப்போது எங்களை உள்ளே வரும்படி அழை; இல்லாவிட்டால் வன்முறைக்கு உடந்தை என்று உங்களையும் கைது செய்வோம் என்று சொல்லியிருக்கலாம். மோதல் பற்றி உளவுத் தகவல் முன்கூட்டி கிடைத்தபோதும் செயல்படாதது பெருந்தவறு.

தொடர்ந்து வன்முறைக் காட்சிகளை சன் டிவியும் ஜெயா டிவியும் ஒளிபரப்பிக் கொண்டே இருப்பது இதழியல் தர்மமா? மேலும் இரு ஜாதி மோதல்களை இது தூண்டாதா?

இந்த ஒளிபரப்புகள், முதல் நாள் மட்டுமே, செய்தி என்ற அடிப்படையில் நியாயமானவை. கலைஞருக்கும் தயாநிதி மாறனுக்கும் இடையே ஒரு பிரச்சினையும் இல்லையென்றால், இப்போது சன் டிவியும் கலைஞர் டி.வி போல சும்மாதான் இருக்கும். சட்டக் கல்லூரி நிகழ்ச்சியில் கடும் தாக்குதலுக்குள்ளானது தலித் மாணவர்களாக இருந்திருந்தால், ஜெயா டி.வி இந்த அளவுக்குத் திரும்பத் திரும்பக் காட்டிப் பிரசாரம் செய்யாது.

இந்த வன்முறைக் காட்சிகளால் அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கும் நடுத்தர வகுப்பு மனங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அன்றாடம் தினசரிகளில் படிக்கும் ஒவ்வொரு வன்முறை பற்றிய செய்திக்குப் பின்னாலும் இதே போன்ற காட்சிகள்தான் இருக்கின்றன. தலித்துகள் மீதான, பெண்கள் மீதான, தொழிலாளர் மீதான, ஏழைகள் மீதான அத்தனை வன்முறைகளும் கோரமானவைதான். அவை ஒவ்வொன்றிலும் அரசியல் நிர்வாகங்கள், காவல் துறை ஆகியோரின் கையாலாகாத்தனம், அலட்சியம், மெத்தனம் , உடந்தை எல்லாம் உள்ளன. அவை ஒவ்வொன்றும் இது போலவே நம் மனசாட்சியை உறுத்த வேண்டும்.

ஜாதி மோதல்களிலிருந்து விடிவே வராதா?

வரும். வந்தே தீரும். பல காலமாக ஒடுக்கப்பட்ட ஜாதியினரிடம் இப்போது விழிப்பு ஏற்படும்போது, அது பூமிப் பந்தின் உள்தகடுகள் அசைந்தால் நில நடுக்கம் ஏற்படுவது போல சமூக அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. அரசியல் தலைமைகள் செய்யத் தவறுகிற ‘எல்லாருக்கும் சமமான கட்டாயக் கல்வி‘ என்பது முதல் தேவை. ஜாதி, மதம் முதலியவற்றின் அடிப்படையில் யார் எங்கே எந்த மனித உரிமையை மீறினாலும், பாரபட்சமில்லாமல் நடவடிக்கை எடுக்கும் அரசியல் உறுதி வேண்டும். எந்த ஜாதி அமைப்பு தொடர்பான நிகழ்ச்சியிலும் எந்த அரசியல், கலை, கல்வித்துறைப் பிரமுகர்கள் பங்கேற்கக் கூடாது. ஜாதி மறுத்து நடக்கும் கலப்பு திருமணத் தம்பதியினருக்கு வேலையில் இட ஒதுக்கீடு, பொருள் உதவி முதலியன தரப்படவேண்டும். தேர்தல் ஆணையம் போல காவல் துறை சுயாட்சி அமைப்பாக்கப்பட வேண்டும். இப்படி நிறைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால்தான் சமூக மாற்றம் சமத்துவம் ஏற்படமுடியும்.

கடைசியாக ?

கத்தியைத் தூக்கிய பாரதி கண்ணன்களுக்கும் கம்புகளைத் தூக்கிய சித்திரைச் செல்வன்களுக்கும் ஒரு ஸ்வீகாரத் தந்தையாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அரசியலுக்கு வாருங்கள். ஆனால் சரியான கொள்கைகளையும் லட்சியங்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஜாதி அமைப்புகளில் இன்று ஒரு நல்லகண்ணு, ஒரு கே.ஆர்.நாராயணன் போன்ற மாமனிதர்களை உருவாக்கும் தலைமைகள் இல்லை. கத்திக்கும் கம்புக்கும் பதிலாக பேனாவையும் கம்ப்யூட்டரையும் உங்கள் கைகளில் தரக்கூடிய தலைமைகளைத் தேடுங்கள்.

ஒரு நிமிடம் யோசியுங்கள். நீங்கள் எந்த ஜாதியில், எந்த வீட்டில், எந்த நாட்டில் பிறந்தீர்கள் என்பதெல்லாம் தற்செயலாக இயற்கையில் நடந்த ஒரு விபத்து. வீடு மாறிப் பிறந்திருந்தால், உங்களில் யார் எந்தத் தலைவருக்காக ஆயுதம் தூக்கியிருப்பீர்கள் என்று யோசித்துப் பார்த்தால், இதன் அபத்தம் புரியும். ஜாதிப் பெருமையோ சிறுமையோ உங்கள் மீது பிறப்பால் திணிக்கப்பட்டது. நீங்கள் தேர்ந்தெடுத்தது அல்ல. அதைத் தூக்கி எறியுங்கள். ஒரு புல்லாக, ஒரு பூச்சியாக, ஒரு புழுவாகப் பிறக்காமல், ஒரு மனிதக் குழந்தையாகப் பிறந்திருப்பதன் பயனை முழுமையாக அனுபவிக்க உங்களுக்குத் தேவை அன்பு; ஆயுதம் அல்ல.

வேதனைகளுக்கு நடுவே

இந்த வார சிரிப்பு:

அ.இ.அ.தி.மு.க நடத்தும் பொதுக்கூட்டங்களில் இனி தனி நபர்களைப் பாராட்டிப் பேசக்கூடாது என்று கட்சிப் பொதுச் செயலாளர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

17.11.2008

23. ரஹ்மானிடம் கற்றுக் கொள்வோம் !

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் ஆஸ்கர் விருதுகளை வென்றிருப்பதையடுத்து ரஹ்மானின் வாழ்க்கைப் பயணக் குறிப்புகளைப் பல்வேறு பத்திரிகைகளில் படிக்கும்போது மீண்டும் பிரமிப்பும் மரியாதையும் அதிகரிக்கின்றன.

பன்னிரெண்டு வயதுச் சிறுவனாக இருக்கும்போதே குடும்பத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு கீபோர்ட் கலைஞனாக வேலை பார்த்து, படிப்பைத் தொடரமுடியாமல் விட்டுவிட்டு, இசையையே படிப்பாகவும் தொழிலாகவும் ஒரே நேரத்தில் ஆக்கிக் கொண்டு இன்றைக்கு உலகம் கொண்டாடும் ஓர் இடத்தில் வந்து நிற்கும் ரஹ்மானை உருவாக்கியது எது ?

சிறு வயதிலேயே அவருக்கு ஏற்பட்டுவிட்டிருந்த மனப் பக்குவம், உள்ளார்ந்த அமைதி, பொறுமை, உழைப்பு இவைதான் அவரை உருவாக்கியிருக்கின்றன. முதல் அடி எடுத்துவைக்கும்போது அவருக்காகப் பிரசாரம் செய்ய அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என்று எவரும் இருக்கவில்லை. முதல் படத்திலேயே பெரும் வெற்றிப் பாடல்களை கொடுத்தபோதும், அவருக்கு கட் அவுட் வைக்க ஆளில்லை. இனி வரும் பட விளம்பரங்களில் அவர் பெயரைத்தான் முதலில் போடவேண்டும் என்று தயாரிப்பாளர்களை நிர்ப்பந்திக்க அவர் சார்பில் எவரும் வேலை செய்யவில்லை.

சாதாரண மேடைக் கச்சேரிகள் முதல் தியேட்டர் ரிகார்டிங்கில் கீபோர்ட் வாசிப்பது வரை சிறுவனாக, இளைஞனாக அன்றைய திலீப் வேலை பார்த்தபோது, ‘அப்பா இல்லாத குழந்தை’ என்று மறைந்த அவருடைய அப்பா இசைக்கலைஞர் ஆர்.கே சேகரை அறிந்த வட்டாரத்தின் பரிவு உணர்ச்சி சின்ன அளவில் மட்டுமே உதவியிருக்க முடியும். கீபோர்ட் வாசிப்பிலும் புதிய தொழில்நுட்பத்தை உடனே கிரகித்து பிரயோகிப்பதிலும் இருந்த திறமைதான் ரஹ்மானை தொழிலில் முன்னேற்றிய அம்சங்கள்.

பத்தொன்பது வயதிலேயே ஏராளமான விளம்பரங்களுக்கு இசையமைக்கத் தொடங்கிவிட்ட ரஹ்மான் 25வது வயதில் திரைப்பட இசையமைப்பாளரானபோது, முதல் படப் பாடல்களே அவரை தமிழ் ரசிகர்களும் அனைத்திந்திய அளவிலான ஹிந்தி ரசிகர்களும் கொண்டாட வைத்தன.

ரஹ்மானின் புகழும் சாதனைகளும் வளர வளர, அவருடைய தன்னடக்கம் மேலும் மேலும் அதிகமாகியது. 'நான்' என்ற அகந்தை அவரை ஆட்கொள்ளவே இல்லை. ஆழமான இறைப் பற்றும் ஆன்மிகப்பிடிப்பும் இருந்தபோதும், ரஹ்மான் சாமியார் வேடம் போடவில்லை. தன் பக்தியையே தன் வியாபார பிம்பமாக ஆக்கி தத்துவ உளறல்களைப் பரப்பிக் கொண்டிருக்கவில்லை. என்னை விட்டால் வேறு யார் இங்கே உண்டு, நானே மன்னன், மன்னனுக்கு மன்னன், நானே கடவுள் என்றெல்லாம் பாடலாசிரியர்களுக்கு தன்னைப் பற்றிய பல்லவியைக் கொடுத்து பாட்டு போட்டுக் கொள்ளவில்லை.

வளர வளர, ரஹ்மானிடம் இருந்த ஈகோ, சுய அகங்காரம் தேய்ந்துகொண்டே போய் தாமரை இலைத் தண்ணீர் போன்ற மனப் பக்குவத்தை அவரிடம் ஏற்படுத்தியிருப்பதுதான் பிரமிப்புக்குரியதாக இருக்கிறது. ரஹ்மானை விட திறமைசாலிகள் இருந்திருக்கிறார்கள்;இருக்கிறார்கள்; இன்னும் வருங்காலங்களில் வருவார்கள். திறமையோடு, ஆன்றவிந்தடங்கிய மனமும் இருப்பவர்கள்தான் அபூர்வம்.

அப்படிப்பட்ட மனம் ரஹ்மானுக்கு இருப்பதால்தான் ரஹ்மானுக்கு இதர இசைக் கலைஞர்கள் பற்றிய எந்த காழ்ப்புணர்ச்சியும் கசப்புணர்ச்சியும் இல்லை. தன் முதல் படத்தின் ஆல்பத்திலேயே, தனக்காக வாசித்த புல்லாங்குழல், டிரம்ஸ், கிடார் கலைஞர்கள் பெயர்களையும் அச்சிடச் செய்த முதல் இசையமைப்பாளர் அவர்தான். இப்படி சக கலைஞர்களுக்குரிய அங்கீகாரத்தை அவருக்கு முன் யாரும் தரவில்லை. அவர் தொடங்கியபின், மற்றவர்களும் செய்தாகவேண்டிய அவசியம் வந்தது.

உலக அளவில் மேலை இசை மரபில் இது சகஜமானது. இசைக் கோலத்தைக் கற்பனை செய்து அதற்கான குறிப்பை எழுதுகிற இசையமைப்பாளன் என்பவன் சமமானவர்களில் முதன்மையானவன் (first among equals) *என்ற பார்வை அங்கே உள்ளது. அந்த இசைக் குறிப்புகளை வாசிக்கிற ஒவ்வொரு கலைஞரும் சேர்ந்த கூட்டு முயற்சியே இறுதியான இசைப்பதிவு. சமமான இதர கலைஞர்களும் அங்கீகரிக்கப்படவேண்டியவர்கள் என்ற மேலை மரபு இங்கே ரஹ்மான் மூலமே தமிழ் சினிமாவில் அறிமுகமாகியது.*

மேலை இசையமைப்பாளர் வெப்பருடன் சேர்ந்து இசை நடன நாடகத்துக்கு இசையமைத்தபோதும், இதற்கு முன்பு வெவ்வேறு மேலை சிம்பனி இசைக்குழுக்களுடன் சேர்ந்து பணியாற்றியபோதும் மேற்கத்திய படங்களுக்கு இசையமைத்தபோதும் அதற்காக தமிழகத்தில் ரஹ்மான் கொண்டாடப்படவில்லை. காரணம் ரஹ்மானேதான். தான் தொடர்ந்து செய்துகொண்டிருக்கும் இசை வேலைகளில் இவையும் ஒன்று என்ற ரஹ்மானின் மன நிலையே அதற்குக் காரணம். ஆங்கிலப்படம் எலிசபெத்துக்கு ரஹ்மான் இசையமைத்த உடனே அதற்காக மீடியாவில் ரஹ்மானை 'ஆதிக்க ஆங்கிலேயரையே இசையால் வீழ்த்திய புரட்சிப் புயல்' என்று வர்ணித்து செய்திகளை வரவழைக்கச் செய்ய, ரஹ்மான் எப்போதுமே ஒரு தனி பி.ஆர். ஓ குழுவை தன்வசம் வைத்துக் கொள்ளவில்லை.

ஞாநி

இப்போது ஆஸ்கர் விருதுகளை 'ஸ்லம்டாக் மில்லியனேர்' படத்தின் இசைக்கும் பாடலுக்கும் வென்றிருக்கும்போதும், ரஹ்மான் மேடையிலும் பேட்டிகளும் பேசும் பேச்சுகள் ரஹ்மானின் பக்குவமான முதிர்ந்த மன நிலையைக் காட்டுகின்றன. ஜெய் ஹோ என்ற சொல்லைப் பாட்டில் பயன்படுத்து; அது நன்றாக வரும் என்ற யோசனையை தனக்கு ஹிந்தி இயக்குநர் சுபாஷ் கய் சொன்னதாக ரஹ்மான் சொல்லுகிறார். இந்த மாதிரி சாதாரணமாகக் கூட இன்னொருவர் தனக்கு செய்த உதவியை வெற்றித் தருணத்தில் சொல்லும் இசை மேதைகள் இங்கே அபூர்வம்.

வாழ்க்கையில் பணம், புகழ் போன்ற லௌகீக வெற்றிகளையும் சரி, தன்னுடைய சுயதிருப்தியை ஏற்படுத்தும் செயல்களை முடித்த மகிழ்ச்சிகளை சந்தித்தவர்களும் சரி, அந்தப் பயணத்தில் பல வலிகளை, கசப்புகளை, ஏமாற்றங்களை சந்தித்தபின்னரே கடந்து வந்திருக்கிறார்கள். துயரங்களிலிருந்து வெற்றிக்கு வந்தபின், அத்துடன் சேர்ந்து கிடைக்கும் அதிகாரத்தை எப்படி அவர்கள் அணுகுகிறார்கள் என்பதே முக்கியம்.

இன்னொருத்தருக்கு வலியை ஏற்படுத்துவதைப் பற்றிக் கவலைப் படாமல் அதிகாரத்தை அனுபவிப்பவர்களே அதிகம். தனக்கு நேர்ந்த கசப்புகள் தன்னால் இன்னொருத்தருக்கு நேரக் கூடாது என்ற உன்னத மன நிலையை அடைபவர்கள் குறைவு.

ரஹ்மானும் பல கசப்புகளை வலிகளை சந்தித்துதான் ஆஸ்கர் மேடை வரை வந்து நிற்க முடிந்தது. அப்படி நிற்கும்போது அவர் தன் விருது ஏற்புரையில் சுருக்கமாக சொன்ன ஒரு கருத்து அவர் அடைந்த பக்குவம் எப்படி வந்தது என்பதை நமக்கு உணர்த்துகிறது.

''என் முன்னால் இரண்டு வழிகள்தான் இருந்தன. வெறுப்பு அல்லது அன்பு. நான் அன்பைத்தேர்ந்தெடுத்தேன். அதனால்தான் இங்கே வந்து நிற்க முடிந்திருக்கிறது''

ரஹ்மானின் வெறுப்புக்குள்ளாக வேண்டியவர்கள் பல பேர் இருக்கக்கூடும். ஆனால் அவர் தன் சக்தியை அந்தப் பக்கம் வீணாக்கவில்லை. தான் நேசித்தவற்றின் மீதே செலவிட்டார். ரஹ்மானிடம் இன்றைய இளைஞர்கள் கற்கவேண்டிய மிக சிறந்த பண்பாக இது எனக்குத் தோன்றுகிறது. அதிலும் எதன் மீதேனும் வெறுப்பைப் பரப்பும் சக்திகள் இளைஞர்களை சூழ்ந்திருக்கும் இன்றைய சூழலில் ரஹ்மானின் பேச்சு அதிக முக்கியத்துவம்பெறுகிறது.

பூச்செண்டு:

வேறு யார் ? ரஹ்மானுக்கும் ரசூல் பூக்குட்டிக்கும்தான் !

குட்டு:

அசட்டுத்தனமான அபத்தமான அறிக்கை அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவுக்கு.

கேள்வி:

*பெரியார் திராவிடர் கழகத்தலைவரும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளருமான கொளத்தூர் மணி ''ராஜீவ் காந்தி கொலை செய்யப்படவில்லை. அவருக்குத் தரப்ட்டது மரண தண்டனை. உண்மையில் நாட்டுப்பற்று உள்ள இந்தியன், சமூக நீதி கோரும் பிற்படுத்தப்பட்டவன் எவனாவது ராஜீவ் காந்திக்கு மரண தண்டனை கொடுத்திருக்க வேண்டும். நாம் செய்யத்தவறியதை ஈழத்தமிழன் ஒருவன் செய்தபோது நாம் உண்மையில் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். ஏனென்றால் **6000** பேரைக் கொன்ற, **1000** பெண்களை பாலியல் வல்லாங்கு செய்த இந்திய அமைதிப்படையை ஈழத்துக்கு அனுப்பியவன் ராஜீவ் காந்தி. துடிக்காதா நெஞ்சம்? ஒரு ஈழத்தமிழன் செய்திருந்தால் அது நியாயம். விடுதலைப்புலிகள் செய்திருக்காவிட்டால் அது குற்றம் செய்து இருந்தால் பாராட்டுகிறோம். இல்லையென்றால் கண்டிக்கிறோம் என்று நாம் பேசியிருக்க வேண்டும்'' என்று பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்.*

ராஜீவ் செய்த 'குற்ற'த்துக்காக விடுதலைப் புலிகள் மரண தண்டனை வழங்கலாம் என்றால், அந்த 'குற்ற'த்துக்கு தொடர்பே இல்லாத இன்னும் இருபது பேரையும் ஸ்ரீபெரும்புதூரில் கொன்றதற்காக விடுதலைப்புலிகளுக்கு மரண தண்டனை வழங்கலாமா? அந்த 'அப்பாவிகள்' தற்செயலாக செத்தது தவிர்க்க முடியாதது என்று சொல்வீர்களா? புலிகளுக்கும் ராஜபக்ஷே அரசுக்கும் நடக்கும் போரில் இடையில் சில அப்பாவித் தமிழர்கள் சாவது தவிர்க்கமுடியாதது என்று ஜெயலலிதா சொன்னதைப் போன்றதுதானே அது?

குற்றத்துக்கு மரண தண்டனை வழங்குவது சரியென்றால் இந்திய சட்டபடி குற்றவாளிகளான ராஜீவ் கொலையாளிகளுக்கு விதித்த மரண தண்டனைக்கு எதிராக ஏன் கையெழுத்து இயக்கம் நடத்தினீர்கள் ? ஏன் கருணை மனுக்களை ஆதரிக்கிறீர்கள் ? சில மரண தண்டனைகள் மட்டும் அநியாயமானவை; மற்றவை இருக்கலாம் என்பதுதான் மனித நேயக் கையெழுத்து இயக்கமா?

23.2.2009

28. லஞ்சம் கொடுத்து ஓட்டு கேட்பது ஏன் தெரியுமா?

நடக்கப் போகும் மக்களவைத் தேர்தலில் எந்தக் கூட்டணிக்கும் தன் கொள்கை என்ன என்பது தெரியாது; எதைச் சொல்லி ஓட்டு கேட்பது என்பதிலும் குழப்பம். அவ்வளவு ஏன், யாருடன் கூட்ட்டணி வைத்துக் கொள்ளலாம் என்பதில் கூடக் கடைசி நிமிடம் வரைக் குழப்பம்தான்.

டெல்லி ஆட்சியில் கடைசி நிமிடம்வரை தங்களுடனிருந்து பதவி அதிகார சுகத்தை அனுபவித்த மூன்று முக்கிய கட்சிகளை தன் கூட்டணியில் காங்கிரசால் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. லாலு பிரசாத் யாதவ், ராம் விலாஸ் பாஸ்வான், டாக்டர் ராமதாஸ் மூவரும் தேர்தலில் எதிரிகளாகிவிட்டார்கள்.

மிகப் பெரியது என்பதால் முக்கியமான மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் முலாயம்சிங் யாதவின் நட்பையும் காங்கிரஸ் இழந்துவிட்டது. மாயாவதியின் நட்பையும் பெற முடியவில்லை. குட்டி கட்சியான தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கூட ஆந்திரத்தில் காங்கிரசுடன் இருந்த நட்பை முறித்துவிட்டது. மகாராஷ்டிரத்தில் ஷரத் பவாரின் கட்சியின் அணைப்பு தொடர்ந்தாலும், பவாரின் இன்னொரு கை சிவ சேனாவின் இடுப்பை வருடிக் கொண்டிருக்கிறது.

பி.ஜே.பி நிலைமை ஒன்றும் இதை விட சிறப்பாக இல்லை. இதே அவல கதியில்தான் அதுவும் கிடக்கிறது. அத்வானி கட்சியின் இந்துத்துவா கோஷத்தை கொஞ்சம் அடக்கி வாசிக்க நினைத்தபோது, ஆர்.எஸ். எஸ்காரர்கள் கைப்புள்ள வருண் காந்தியைத் தூண்டிவிட்டு, வழக்கமான மத துவேஷ அரசியலை நோக்கி கட்சியைத் தள்ளிவிட்டுவிட்டார்கள்.

ஒரிசாவில் நல்ல தோழமைக்கட்சியாக இருந்து வந்த பிஜு ஜனதா தளம் ஏற்கனவே சங் பரிவாரின் கிறித்துவ எதிர்ப்பு தாக்குதல் போன்றவற்றில் தர்மசங்கடப்பட்டுக் கொண்டிருந்தது. சரியான தருணம் கிடைத்ததும் பி.ஜே.பி அணியை விட்டு ஓடிவிட்டது. மகாராஷ்டிரத்தில் பி.ஜே.பியுடன் கூட்டணியில் இருந்துகொண்டே சிவசேனை பிரதமர் பதவிக்கு மராட்டியருக்கே முன்னுரிமை தருவோம் என்று சொல்லி, அத்வானியின் பிரதமர் கனவுக் குமிழியில் ஓட்டை போட்டிருக்கிறது.

இன்னொரு கூட்டாளியான ஐக்கிய ஜனதா தளத்தின் நிதிஷ் குமார் பகிரங்கமாகவே வருண் காந்தியின் மதவெறிப் பேச்சைக் கண்டித்திருக்கிறார்.

கட்சிக்குள்ளேயோ, பிரமோத் மகாஜன் மறைவுக்குப் பின் முக்கிய வசூல் சக்ரவர்த்தியான அருண் ஜெட்லிக்கும் கட்சித்தலைமைக்கும் இருக்கும் சண்டை பகிரங்கமாகவே நடக்கிறது.

அமெரிக்காவுடன் அணு சக்தி ஒப்பந்தம், தாராளமய பொருளாதாரக் கொள்கை இரண்டிலும் இருக்கும் முரண்பாடுகளினால், காங்கிரஸுக்கு எதிரியாக மறிய இடதுசாரிகள், இந்த இரு கொள்கைகளையும் ஆதரிக்கிற இதர அத்தனை உதிரிக் கட்சிகளுடனும், மாநிலக் கட்சிகளுடனும் கூட்டணியில் இருக்கின்றன.

தமிழ் நாட்டிலோ தேர்தல் பிரச்சினை - விலைவாசியோ, வாழ்க்கைத் தரமோ இல்லை. யார் அசல் தமிழர், யார் போலித் தமிழர் என்று பட்டி மன்றம் தொடங்கிவிட்டது. இலங்கைத் தமிழருக்கு ஆதரவானவர்கள் என்று சொல்லிக் கொள்வோரில் இருக்கும் போலித் தமிழரை தி.மு.க பேச்சாளர்கள் அடுத்த ஆறு வாரங்களில் மேடை மேடையாக நமக்கு அடையாளம் காட்டப் போகிறார்கள். பதிலுக்கு அடையாளம் காட்டக் கூடிய கொளத்தூர் மணி, சீமான், நாஞ்சில் சம்பத் ஆகியோரை முன்னெச்சரிக்கையுடன் கலைஞர் ஒரு வருடத்துக்கு உள்ளே வைத்து விட்டார்.

உண்மையில் இந்தத் தேர்தலில் அசல் பிரச்சினைகள் எதுவும் மக்கள் முன்பு இந்தக் கூட்டணிகளால் விவாதிக்கப்படப் போவதில்லை. அசல் பிரச்சினைகளைப் பற்றி ஏதாவது பேசினால் மேம்போக்காகப் பேசிவிட்டு, கவனத்தை திசை திருப்பும் ஆற்றல் வாய்ந்த தனி நபர் தாக்குதல், அவதூறுகள் போன்ற ‘பொழுதுபோக்கு’ உத்திகளுக்குப் போய்விடுவார்கள்.

அப்படியானால் எதை நம்பி இத்தனை கட்சிகளும் நம் வாக்குகளைக் கேட்டு வருகின்றன? மக்கள் லஞ்சம் வாங்கத் தயாராகிவிட்டார்கள் என்று கட்சிகள் இப்போது பலமாக நம்புகின்றன. லஞ்சம் வாங்க கூடியவர்களாக நம்மை ஆக்கிவிட்டோம் என்று இத்தனை காலம் அவர்கள் செய்த தயாரிப்பு பற்றிப் பெருமையோடும் நம்பிக்கையோடும் இருக்கின்றன.

ஒரு எம்.பி. தொகுதியில் வேட்பாளர் மொத்தமாக 25 லட்சம் ரூபாய் வரை செலவிடலாம் என்று தேர்தல் ஆணையம் அனுமதித்திருக்கிறது. சொந்தப் பணமாகக் குறைந்தபட்சம் ஒரு கோடி ருபாயாவது செலவிட வக்கில்லாத எவருக்கும் எந்தப் பெரிய கட்சியும் சீட் தரவில்லை. ஒவ்வொரு தொகுதியிலும் 5 கோடி முதல் 50 கோடிவரை செலவிடப் படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மொத்தம் 543 தொகுதிகள். சுமார் 2700 கோடி முதல் 27 ஆயிரம் கோடி வரை அள்ளி இறைக்கப்படும்.

இப்படி லஞ்சப் பணம் வாங்கிக் கொண்டு ஓட்டு போடுவோர் தேசச் துரோகிகள் பட்டியலிலும் தன் நலனுக்கு எதிராக தானே தற்கொலை செய்யும் முட்டாள்கள் பட்டியலிலும் சேர்க்கப்பட வேண்டியவர்கள். இப்போது வாக்காளருக்குக் கொடுக்கப்படும் லஞ்சப் பணம் அத்தனையும் கடந்த வருடங்களில் இந்த வேட்பாளர்கள் கொள்ளையடித்த பொதுப்பணத்தில் ஒரு துளி மட்டும் தான். இதை கொடுத்துவிட்டு மறுபடியும் கொள்ளையடிக்க வாய்ப்பு தேடுகிறார்கள்.

பணம் வாங்கிவிட்டு மாற்றிப் போட்டால் தெரிந்து போய்விடும் என்ற பயம் சிலருக்கு இருக்கிறது. வாக்குச்சாவடியில் கேமரா உன்டு. அதில் நாம் யாருக்குப் போட்டோம் என்று பதிவாகிவிடும் என்று பயப்படும் அப்பாவிகளும் உண்டு. அபடி எதுவும் இல்லை. நம் ஒட்டு முற்றிலும் ரகசியமானது நீங்கள் யாருக்கு ஒட்டு போட்டீர்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது.

நமக்கு லஞ்சம் கொடுத்து பதவிக்கு போகத் துடிப்பவர்கள் ஏன் அப்படி துடிக்கிறார்கள் ? இன்னும் கொள்ளையடிக்க மட்டும்தான். தமிழ் நாட்டு மாநில வரவு செலவு திட்டத்தின் அளவு மட்டுமே வருடத்துக்கு 60 ஆயிரம் கோடி. அடுத்த ஐந்து வருடங்களில் இது மூன்று நான்கு லட்சம் கோடி குட ஆகலாம். ஒரு மாநிலத்திலேயே இவ்வளவு தொகை என்றால் மத்தியில் எவ்வளவு?

இந்தப் பெருந்தொகைகளிலிருந்து கையாடும் வாய்ப்புக்காகத்தான் இப்போது நமக்கு துக்கிளியூண்டு லஞ்சம் தர துடிக்கிறார்கள். மற்ற நேரங்களில் நம்மிடம் லஞ்சம் கேட்கிற வெட்கங்கெட்டவர்கள். இந்தியாவில் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருக்கும் 30 சத விகிதம் பேர் மட்டுமே அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்குமாக வருடத்துக்கு சுமார் ஆயிரம் கோடி லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறதாம். மீதி பேர் கொடுக்கும் லஞ்சத்தையும் கணக்கிட்டுப் பாருங்கள்.

உலகப் பசி அளவுக் குறியீட்டின் படி வளர்ச்சியில் இந்தியா கீழே 6 வது இடத்தில் இருக்கிறது. மொத்தமிருக்கும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் சத்துக் குறைவுடன் எடை குறைந்து இருக்கும் பரிதாபத்துக்குரிய குழந்தைகள் மட்டும் 40 சதவிகிதத்துக்கும் மேலே. இதில் நம்மை விட வங்க தேசம் மேலான நிலையில் இருக்கிறதாம் !

கடந்த காலத்தில் இதற்கெல்லாம் பொறுப்பானவர்கள்தான் இப்போது விதவிதமான கூட்டணிகள் அமைத்துக் கொண்டு நம்மிடம் பிச்சைப் பாத்திரம் ஏந்தி வந்து கொண்டிருக்கிறார்கள். காறித் துப்புங்கள். அதற்குப் பெயர் 49 ஓ!

பூச்செண்டு

மதச் சார்பின்மை என்ற கொள்கை அடிப்படையில் பி.ஜே.பி.தலைவர் அத்வானியை எதிர்த்து குஜராத் காந்திநகர் தொகுதியிலேயே சுயேச்சையாகப் போட்டியிட முடிவெடுத்திருக்கும் கலைஞர் மல்லிகா சாராபாய்க்கு இ.வா. பூச்செண்டு.

குட்டு

தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வருண் காந்தியை முடக்கியது சரிதான் என்று சொல்லியிருக்கும் மார்க்ஸிஸ்ட் தலைவர் பிருந்தா காரத்துக்கும், ஒழிக்கப்படவேண்டிய இந்தக் கறுப்புச் சட்டத்தை அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்தி வரும் கலைஞர் கருணாநிதி, மாயாவதி ஆகியோருக்கும் இ.வா.குட்டு.

31.3.2009

43. மூன்று எரிச்சல்கள்

என் ரத்தக் கொதிப்பை ஒவ்வொரு வேளையும் அதிகரிப்பதற்கான நிகழ்ச்சிகள் எப்போதும் நடந்துகொண்டே இருக்கின்றன. டி.வி. பார்க்காமல், செய்தித்தாள் படிக்காமல், வீட்டுக்குள் ஏ.சி. அறையில் முடங்கி, வெளியே சென்றால் ஏ.சி. காரில் பயணித்து, ஏ.சி. அலுவலகத்தில் அமர்ந்து வாழ்க்கை நடத்தினால் மட்டுமே இந்த ரத்தக் கொதிப்பிலிருந்து தப்பிக்க முடியும். பல அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் இப்படி வாழ்க்கை நடத்தித்தான் சுரணை கெட்டுக் கிடக்கிறார்களோ என்று தோன்றுகிறது.

எரிச்சல் 1:

தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் சமபளம் 50 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது தவிர கார் அலவன்ஸ் மட்டும் 20 ஆயிரம் ரூபாய். இன்னும் பல சலுகைகள் அவர்களுக்கு உண்டு. தொகுதி மேம்பாட்டு நிதி வேறு ஒரு கோடி 50 லட்சத்திலிருந்து ஒரு கோடி 70 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இந்த அளவு வாங்கும் சம்பளத்துக்கு அவர்கள் என்ன வேலை பார்த்தார்கள் என்று கணக்கிட்டால் எரிச்சல்தான் வருகிறது. ஒரே நாளில் 30 சட்டங்களை நிறைவேற்றித் தள்ளுகிறார்கள். அந்தக் களைப்பு தீர அரசு செலவில் முதலமைச்சரால், 46 ஐட்டங்களுடன் தாஜ் கோரமாண்டல் நட்சத்திர ஓட்டலில் விருந்து வேறு வைக்கப்படுகிறது. (ஒரு சாப்பாட்டின் விலை சுமார் ஆயிரம் ரூபாய் என்கிறார்கள்)

ஐந்து வருடத்துக்குப் பிறகு மறுபடியும் எம்.எல்.ஏ ஆவாரா மாட்டாரா என்று நிச்சயமில்லாத ஒரு பதவியை வகிக்கும் இவர்களுக்கு சென்னை நகரில் அரசின் மலிவு விலையில் ஆளுக்கு இரண்டரை கிரவுண்டு வீட்டு மனை வேறு வேண்டுமாம். காங்கிரஸ் எம்.எல்.ஏ ஞானசேகரன் இந்த கோரிக்கையை வைத்ததும் முதல்வர் இன்னும் நூறு எம்.எல்.ஏக்களின் கையெழுத்துடன் கோரிக்கை மனு கொடுங்கள் என்கிறார். அடுத்த 30 நிமிடங்களில் 105 எம்.எல்.ஏக்களின் கையெழுத்துடன் மனு வந்துவிடுகிறது ! அட உலக மகா உத்தமர்களே ... உங்கள் சட்டமன்ற வாழ்க்கையில் எந்த மக்கள் பிரச்சினைக்காவது இப்படி 30 நிமிடத்துக்குள் நூறு பேர் ஒன்று

சேர்ந்ததுண்டா?

சென்னை வரும்போதெல்லாம் எம்.எல்.ஏக்கள் தங்குவதற்கு கிரானைட்டும் டைல்சும் போட்டு இழைத்த ஹாஸ்டல் என்ற பெயரிலான அபார்ட்மெண்ட்டுகள் இருகின்றன. பலவற்றில் தொகுதியிலிருந்து வருகிற யார் யாரோ தங்குகிறார்கள். இது தவிர சென்னையில் வீட்டு மனைவேறு வேண்டுமாம். ஐந்தாண்டுக்கு ஒரு முறை243 எம்.எல்.ஏக்களுக்கும் சென்னையில் வீட்டு மனை ஒதுக்கிக் கொண்டே வந்தால் ஐந்தே வருடங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மனைகளை ஒதுக்க வேண்டும். கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய்க் கரையோரங்களில் குடிசைகளில் வசித்துக் கொண்டிருந்த உழைக்கும் உதிரித்தொழிலாளர்களை காலி செய்து சென்னைக்கு வெளியே துரத்துவதைப் பற்றி சட்டசபையில் கேள்வி கேட்டு அவையையே நிலைகுலைய செய்த சரித்திரமே இல்லை. தான் ரியல் எஸ்டேட் தாதா ஆவதற்காக 30 நிமிடத்தில் கையெழுத்து போட்டு குவிக்கிறார்கள். உருப்படுமா இந்த தேசம் ? உருப்படுமா அரசியல் ?

எரிச்சல் 2:

சுமார் ஒரு கோடி ருபாய் செலவில் சென்னையில் கே.கே. நகர் என்று அழைக்கப்படும் கலைஞர் கருணாநிதி நகரில் இருக்கும் ஒரு பூங்கா புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. கே.கே. நகர் என்ற அராஜகமான பெயரைப் போல எம்.கே.பி நகர் என்று ஒரு நகரும் சென்னையில் அழைக்கப்படுகிரது. மகா கவி பாரதி நகரின் சுருக்கமாம். இந்தப் பெயர்களை எல்லாம் கலைஞர் நகர், பாரதி நகர் என்று எளிமையாக வைத்திருந்தால் இந்த சுருக்க அராஜகம் நிகழ்ந்திராது.

கலைஞர் நகர் பூங்காவையும் இன்னும் பல புதுப்பிக்கப்பட்ட பூங்காக்களையும் அசல் முதலமைச்சர் ஸ்டாலின் இந்த வாரம் திறந்துவைத்தார். இந்தப் பூங்காவுக்கு சிவன் பூங்கா என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. கலைஞர் நகர் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் உருவானபோது இந்தப் பூங்காவின் பெயர் ஜீவா பூங்கா. பொது உடமை இயக்கத்தலைவரும் சுயமரியாதை இயக்க முன்னோடியுமான அதே ஜீவாதான்.

கலைஞர் நகர் உருவாக்கப்பட்டபோது எல்லா தெருக்களுக்கும் நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கத்தலைவர்கள் பெயர்களை சூட்டுவதென்று திட்டமிட்டு சூட்டப்பட்டன. லட்சுமணசாமி, ராமசாமி, அழகிரிசாமி, முனுசாமி, ராஜமன்னார், பி.டி.ராஜன், ஏ.பி. பாத்ரோ என்றெல்லாம் தெருப்பெயர்கள் சூட்டியபிறகு பூங்காவுக்கு ஜீவா பெயர் வைக்கப்பட்டது. இப்போது ஜீவா பூங்கா சிவன் பூங்காவாகிவிட்டது எப்படி ? சில வருடங்கள் முன்பு பூங்காவுக்குள் திடீரென்று ஒரு சிவன் சிலை முளைத்தது சிறு குன்று போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதில் சிவன் சிலை வைத்தது யார் என்பதை சென்னை மாநகராட்சிதான் விளக்க வேண்டும். பின்னர் பூங்காவை பொது மக்கள் சிவன் பூங்கா என்று சொல்ல ஆரம்பித்தார்கள். இப்போது புதுப்பித்தபின்னர், மாநகராட்சியே சிவன் பூங்கா என்று உலோக எழுத்துக்களை பதித்துவிட்டது.

அதை ஸ்டாலின் திறந்துவைத்திருகிறார். பொதுப் பூங்காவுக்குள் சிவன் சிலை எப்படி வந்தது ? எப்போது வந்தது ? யார் வைத்தார்கள் ? இதே போல ஒவ்வொரு பொதுப் பூங்காவிலும் வெவ்வேறு மத அடையாளங்களை சாமர்த்தியமாக கொண்டு வந்து நுழைத்தால், அதை மாநகராட்சி ஏற்று அங்கீகரித்துவிடுமா ?

ஒரு கோடி ரூபாய் செலவில் கலைஞர் நகரின் பூங்காவைப் புதுப்பித்த அரசு நிர்வாகம், இந்த நகரின் ஒவ்வொரு சாலையும் தனியார் முதலாளிகளால் ஆக்ரமிக்கப்படுவதைக் கண்டு கொள்வதே இல்லை. எல்லா சாலைகளையும் வெவ்வேறு டிராவல்ஸ் கம்பெனிகள் கார் பார்க்கிங்காக ஆக்கிவைத்திருக்க்கின்றன. ஆர்.கே.சண்முகம் சாலையில் சரி பாதியை எண்ணெய் லாரிகளும் டிராவல்ஸ் வண்டிகளும் ஓட்டல் வாகனங்களும் ஆக்ரமிக்கின்றன. பி.டி.ராஜன் சாலையில் டெம்போ வாகனங்கள். லட்சுமணசாமி சாலையில் ஒரு டிராவல்ஸ் கம்பெனி நடைபாதை மீதே கார்களை நிறுத்துகிறது. இன்னொரு ஷாமியானா கம்பெனி நடைபாதையை தன் வேன்களை நிறுத்தவும் நாற்காலி, கூடார கோடவுனாகவும் பயன்படுத்துகிறது. இது தவிர கோவில் ஆக்ரமிப்பு வேறு. இந்த வாகனங்களின் டிரைவர்களுக்கு கழிப்பிடங்களாக அருகில் உள்ள வீட்டுச் சுவர்கள் ஆக்கப்படுகின்றன. ஒரு குடியிருப்புப் பகுதி இப்படி சீரழிக்கப்படுவதை கேள்வி கேட்கக் கூட இங்கே ஆளில்லை. கலைஞர் நகரின் ஒவ்வொரு தெருவும் இப்படி முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதால், நடைபாதைகளில் நடக்கவே முடியாமல் என்னைப் போன்ற முதியவர்கள் பலர் திண்டாடுகிறோம்.

எம்.ஜி.ஆர்.நகர் மார்க்கெட் கலைஞர் நகர் சந்திக்கும் இடத்தில் நிரந்தர புதைகுழியாக சாலை பல வருடங்களாக இருக்கிறது. ராமசாமி சாலை, லட்சுமண சாமி சாலை, அழகிரிசாமி சாலை சந்திப்புகளில் திரும்பத் திரும்ப சாலைகள் தோண்டப்பட்டு புழுதி பரப்பும் மண் சாலைகளாக அவை நிரந்தரமாக ஆகிவிட்டன.

அரசு இயந்திரத்தின் அலட்சியத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாக, முதலமைச்சர் பெயரில் இருக்கும் நகர் இருப்பது எவ்வளவு பொருத்தமானது ! உதயம் தியேட்டர் சந்திப்பருகே இருக்கும் ,கலைஞர் கருணாநிதி நகர் என்று நகரின் பெயரை அறிவிக்கும் பலகை கூட உடைந்து எழுத்துகள் காணாமல் போய் சிதிலமாகி, அரசின் பொறுப்பின்மைக்கு பொருத்தமான கல்வெட்டாக திகழ்கிறது !

தெருவில் நடக்கவே முடியாது. காரில் பூங்காவிற்குப் போய் அங்கே சுற்றி சுற்றி நடக்க எல்லா வசதிகளும் செய்யப்படும் என்பதுதான் சிங்காரச் சென்னையின் கொள்கை போலிருக்கிறது !

எரிச்சல் 3:

பீஹார் தலைநகரான பாட்னாவின் தெருக்களில் பட்டப்பகலில் ராகேஷ் என்பவனும் அவன் நண்பர்களும் சேர்ந்துகொண்டு ஒரு இருபது வயதுப் பெண்ணை நிர்வாணமாக்கி அடித்து உதைத்து உர்வலமாக அழைத்துச்

சென்றதை ஒரு மணி நேரத்துக்கும் மேல் அருகிலிருந்து போலீஸ் வேடிக்கை பார்த்திருக்கிறது. பொது மக்களும் வேடிக்கை பார்த்திருக்கிறார்கள். மீடியா, பத்திரிகையாளர்கள் படமெடுத்து நிகழ்ச்சியை செய்தியாக்கியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அராஜகங்களில் பத்திரிகையாளர்களோ மீடியா நிருபர்களோ தலையிட்டு தடுக்க முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. அவர்களும் சேர்ந்து உதை வாங்குவார்கள். வெளியே தெரியாமலே போய்விடக் கூடிய ஓர் அராஜகத்தை உலகத்தின் பார்வைக்குக் கொண்டு செல்ல முயற்சிப்பதே அவர்கள் தொழிலின் நியாயமாகும்., ஆனால் பொது மக்கள் பெரும் திரளாக நினைத்தால் இப்படிப்பட்ட அராஜகங்களைத் தடுக்க முடியும். போலீஸ் தடுக்காமல் வேடிக்கை பார்த்துவிட்டு பின்னர் நடவடிக்கை எடுத்தது என்பது வெட்கக்கேடான விஷயம்.

அந்தப் பெண் ஒரு செக்ஸ் தொழிலாளி. ராகேஷ் என்பவன் ஒரு விபசாரத் தரகன். அவளுக்கு வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றி அழைத்து வந்திருக்கிறான் என்றெல்லாம் போலீஸ் அதிகாரிகள் இப்போது சொல்கிறார்கள். ஒரு பெண் செக்ஸ் தொழிலாளி என்பதால் அவளை பொது இடத்தில் அடித்து உதைத்து நிர்வாணமாக்கும் உரிமை யாருக்கும் இல்லை. ஆனல் பொது மக்களுக்கு ரகசியமாக செக்ஸ் தொழில் தேவை. பகிரங்கமாக ஒழுக்க சீலர்கள் வேடமும் தேவை. இதுதான் இந்தியாவில் பீஹார் மட்டுமல்ல, எல்லா ஊர்களிலும் நம் பொது மக்களின் யோக்கியதை.

நெட்டை மரங்களென நின்று புலம்பினார் என்பான் பாஞ்சாலி சபதத்தில் பாரதி. பீஹாரில் வேடிக்கை பார்த்தவர்கள் புலம்பியதாகக் கூடத் தெரியவில்லை.

நம் சமுகத்தில் பொது மக்களுக்கு எதற்கெல்லாம் ஆத்திரம் வரும் ஆவேசம் வரும் என்ற அளவுகோல்கள் வேகமாக மாறிக் கொண்டிருக்கின்றன. அண்மையில் நடந்த மக்களவைத் தேர்தலின்போது ஒரு தொகுதியில் மக்களுக்கு கவரில் வெறும் (!) 50 ரூபாய் தரப்பட்டதாம். வேட்பாளர் 250 ரூபாய் கொடுத்திருக்கிறார்; அதை விநியோகித்தவர்கள் ஏமாற்றிவிட்டார்கள், என்று வெகுண்டெழுந்த பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கூடி கட்சி தேர்தல் அலுவலகத்தை முற்றுகையிட்டிருக்கிறார்கள். வேட்பாளரே நேரில் வந்து இது எம்.எல்.ஏ தேர்தல் அல்ல; எம்.பி தேர்தல். இதை விட அதிகப் பணம் கொடுக்க இயலாது; தான் கொடுத்ததே 50 ரூபாய்தான் என்று பொதுமக்களிடம் பேசி சமாதானம் செய்தபின்னர் மக்கள் வருத்தத்துடன் கலைந்து போனார்களாம். இது நடந்தது தமிழகத்தில்தான்.

எங்கே போகிறோம் நாம் ?

பூச்செண்டு

நீதிபதிகளின் சொத்துக் கணக்கைத் தெரிவிக்கவும், முறைகேடுகள் செய்யும் நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் வகை செய்யும் சட்டங்களைக் கொண்டுவர முடிவு செய்திருக்கும் மத்திய அமைச்சரவைக்கு இ.வா.பூ.

ஞாநி

திட்டு

வணங்காமண் கப்பலில் இலங்கைத் தமிழர்களுக்காக வந்த நிவாரணப் பொருட்களைக் கப்பல் மாற்றி அனுப்பியபிறகும் இன்னமும் இலங்கையில் கரை இறக்க விடாமல் சாக்குகள் சொல்லி தாமதப்படுத்தும் இலங்கை அரசுக்கும் அதற்கு உடந்தையாக இருக்கும் செஞ்சிலுவை சங்கத்துக்கும் இந்திய அரசுக்கும் இ.வா.தி.

கேள்வி:

கலைஞருக்கு இப்போது 85 வயது. அவர் மனைவி தயாளு அம்மாளுக்கு சுமார் 75 வயது. இருவரின் ஆயுட்காலத்துக்குப் பின்னர்தான் கோபாலபுரம் வீடு இலவச மருத்துவமனை நடத்த வழங்கப்படும் என்றால், சுமார் 20, 25 வருடங்களுக்குப் பிறகு என்றுதானே அர்த்தம்? கலைஞரின் சொத்து மதிப்பு 26 கோடி ருபாய், அழகிரியின் சொத்து மதிப்பு சுமார் 20 கோடி, கனிமொழியின் சொத்து மதிப்பு சுமார் 8 கோடி ரூபாய், ஸ்டாலினின் சொத்து மதிப்பு சுமார் ஒன்றரை கோடி என்று வேட்பு மனுக்களில் சில ஆண்டுகள் முன்னர் அறிவித்திருக்கும் குடும்பத்தால், ஒரு வீட்டை இன்றே இப்போதே மருத்துவமனைக்கு வழங்க முடியாதா என்ன? 20, 25 வருடங்களுக்குப் பின்னர் தமிழக, இந்திய அரசியல் என்ன ஆகும் என்று யார் சொல்ல முடியும்? மாவோயிஸ்ட்டுகள் ரஷ்யசீன பாணியில் புரட்சி நடத்தினால், தலைவர்களின் எல்லா வீடுகளுமே இலவசப் பள்ளிகளும் மருத்துவமனைகளும் ஆகிவிடாதா என்ன ?

25.7.2009

49. கருணைக் கொலை: ஆளுக்கொரு நீதி

இந்திய சட்டங்கள் கருணைக் கொலையை ஒப்புக் கொள்ளவில்லை. அப்படி ஒன்று நடந்தால் அது கொலையாகவோ தற்கொலை முயற்சியாகவோ கருதப்பட்டு வழக்கு பதிவு செய்யப்படும்.

அண்மையில் நடந்த மூன்று நிகழ்ச்சிகள் கருணைக் கொலை பற்றிய நம் சிந்தனையை மீண்டும் கிளறிவிடக் கூடியவை. எப்போது கருணைக் கொலையை ஏற்றுக் கொள்ளலாம், எப்போது மறுக்கலாம் என்பது பற்றி அறம் சார்ந்த கருத்து வேறுபாடுகள் எல்லா சமூகங்களிலும் இருக்கின்றன.

தீர்க்க முடியாத நோய், பொறுக்கமுடியாத வலி போன்றவற்றிலிருந்து ஒரு மனிதரை விடுவிக்க, மரணத்தைத்தவிர வேறு தீர்வு இல்லை என்ற நிலையில் என்ன செய்வது ? அப்போது கருணைக் கொலை அல்லது கருணைத் தற்கொலையைப் பலரும் தயக்கத்துடனேயாவது ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் சட்டம் எந்த நிலையிலும் எதையும் ஏற்பதில்லை.

என் அப்பா 90 வயதை எட்டிய நிலையில் ஏன் இன்னும் நான் தொடர்ந்து வாழவேண்டும் என்ற கேள்வியை எங்களிடம் எழுப்பினார். அவருக்கு எந்த நோயும் இல்லை. நோய்களால் ஏற்படக் கூடிய வலி உபாதைகளும் இல்லை. முதுமையினால் உடலின் எல்லா உறுப்புகளும் தளர்ந்துபோய், இயங்குவது என்பதே ஒரு பெரு முயற்சியாக ஆகிக் கொண்டு வந்தது. முதுமை என்பது நோய் அல்ல. ஆனால் அன்றாட செயல்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் மற்றவர்களை சார்ந்துதான் இருக்கவேண்டும் என்ற உடல்நிலையை முதுமை ஏற்படுத்திவிட முடியும்.

நோய் இல்லை; வலி இல்லை என்றபோது ஏன் வாழ்வதை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்ற கேள்விக்கு என் அப்பா என்னிடம் பதில் சொன்னார். “எனக்கு செய்வதற்கு இனி எதுவும் இல்லை. வாழ்ந்தவரை நிறைவாக வாழ்ந்தாயிற்று. ஒன்றும் செய்யாமல், எதுவும் செய்யும் விருப்பமும் இல்லாமல் எப்படி தினசரி நேரத்தைக் கழிப்பது ? எதற்காக அப்படிக் கழிக்க வேண்டும் ?” வாழ்க்கை முழுவதும் சுறுசுறுப்பாக பல்வேறு ஆர்வங்களுடன் இயங்கிய ஒருவர், தொண்ணூறு வயதில் அப்படிக் கேட்பது எனக்கு நியாயமாகவே பட்டது.

ஆனால் அவரைக் கருணைக் கொலை செய்யவோ கருணைத் தற்கொலை செய்துகொள்ள உதவவோ வழி ஏதும் இங்கே இல்லை. வழி உண்டா என்று நான் ஆராயும்வரை காத்திருக்கும்படி அவரை சமாதானம் செய்துவிட்டு காலம் கடத்தினேன். அடுத்த சில மாதங்களில் அவர் இயற்கையாகவே இறந்துவிட்டதால் என் ஆராய்ச்சிக்கு அவசியமில்லாமற் போய்விட்டது.

இந்த வாரம் 94 வயதான ஒரு காந்தியவாதி மருத்துவர் இறந்த செய்தி படித்தேன். குஜராத்தில் விஸ்நகரைச் சேர்ந்த துவாரகதாஸ் ஜோஷி ஒரு கண் மருத்துவர். காந்தியாலும் வினோபாவாலும் ஈர்க்கப்பட்டு பொதுத்தொண்டில் வாழ்க்கையை செலவிட்டவர். அவர் இனி தான் வழவேண்டிய அவசியமில்லை என்று முடிவெடுத்து வினோபாவைப் போலவே தானும் உணவை மறுத்துவிட்டு மெல்ல மெல்ல உயிர் துறக்க முடிவு செய்தார். இரு வாரங்களாக தண்ணீர் மட்டுமே குடித்தார். எதுவும் சாப்பிடவில்லை. இப்படி உபவாசம் இருந்து இறந்துபோனார்.

இந்திய சட்டப்படி அவர் மீது (வினோபா மீதும்) தற்கொலை முயற்சி வழக்கு போட்டு கட்டாயமாக உணவு கொடுத்து தொடர்ந்து உயிர் வாழ வைத்திருக்கவேண்டும். ஆனால் அப்படி செய்யப்படவில்லை. உன்னதமான இந்திய மரபுகளின்படி உண்ணா நோன்பிருந்து அவர் காலமானார் என்று பாராட்டி ஒரு ஆங்கில ஏடு எழுதியிருக்கிறது.

இன்னொரு பக்கம் உத்தரப் பிரதேசத்திலிருந்து, என் நான்கு மகன்களையும் சாக அனுமதியுங்கள் என்று கேட்டு குடியரசுத்தலைவிக்கு ஓர் ஏழை விவசாயி கடிதம் எழுதியிருக்கிறார். நான்கு மகன்களுக்கும் வயது 22, 20,16,13. நால்வரும் தசை சிதைவு நோயால் ஆறு வயதிலிருந்து அவதிப்படுபவர்கள். இந்த நோய் பாரம்பரியமாக வருவது.

தானாக எழுந்திருக்க முடியாது. உட்கார முடியாது. நடக்க முடியாது. எதுவும் செய்ய முடியாது. "இவர்களைப் பார்த்துக் கொள்வது மிகப்பெரும் சுமையாக இருக்கிறது. சிகிச்சைக்கு கடன் வாங்கிப் பெரும் கடன்காரனாகிவிட்டேன். மருத்துவர்கள் இதை குணப்படுத்தவே முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இவர்களை சாக அனுமதியுங்கள்" என்று அவர்களுடைய தந்தை ஜீத் நாராயண் கடிதம் எழுதியிருக்கிறார்.

இந்த சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள தசை சிதைவு நோயைக் குணப்படுத்த முடியாவிட்டாலும், பயிற்சிகள், மருந்துகள் மூலம் ஓரளவு இயங்கும் நிலைக்கு அவர்களைக் கொண்டு வர முடியும். இதற்கு பெரும் மருத்துவர் குழுவின் கண்காணிப்பும் தொடர்ந்த சிகிச்சையும் தேவை. ஏழையான தன்னால் இது எதையும் இனியும் செய்வது சாத்தியமில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டார் ஜீத் நாராயண். அவர் மாயாவதியின் கட்சி ஆதரவாளர் என்பது எந்த விதத்திலும் அவருக்கு உதவவில்லை.

கருச் சிதைவு என்பது கூட சமயங்களில் கருணைக் கொலைதான். குழந்தை பெரும் உடல், மனச் சிதைவுகளுடன் பிறக்கும் வாய்ப்பு உள்ளதாக ஆரம்பத்திலேயே தெரியவரும்போது கருச் சிதைவு செய்ய முடிவெடுக்கலாம். சட்டப்படி கருவுற்று 20 வாரம் வரைதான் கருச் சிதைவு

செய்யலாம். அதன் பின்னர் செய்வது சட்ட விரோதமானது மட்டுமல்ல. தாய்க்கும் ஆபத்தானது.

பாலியல் வன்முறையில் சிக்கிய பெண்கள் அதனால் கருவுற்றால், அப்போது கருச்சிதைவு செய்வது அவசியம் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பெண்ணின் வழக்கில் அண்மையில் உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பு பெரும் சர்ச்சையை எழுபியுள்ளது.

இந்தப் பெண் சண்டிகர் நகரில் இருக்கும் நாரி நிகேதன் என்கிற காப்பகத்தில் இருந்தார். மனவளர்ச்சி குன்றியவர். 19 வயதானபோதும் 7 வயது குழந்தையின் மன முதிர்ச்சி மட்டுமே உடையவர். அந்தக் காப்பகத்தின் 'காவலாளி'கள் அவரைப் பாலியல் பலாத்காரம் செய்தார்கள். இதில் கர்ப்பமடைந்த அந்தப் பெண்ணுக்குக் கருச் சிதைவு செய்ய காப்பக நிர்வாகம் முற்பட்டது. அதை அந்தப் பெண் ஒப்புக் கொள்ளவில்லை. தான் குழந்தை பெற விரும்புவதாகச் சொன்னார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதி மன்றம் கருச் சிதைவு செய்ய உத்தரவிட்டது.

மேல்முறையீட்டில் உச்ச நீதிமன்றம் கருச் சிதைவுக்கு அந்தப் பெண்ணின் சம்மதம் தேவை என்றும் அவள் குழந்தை பெற விரும்புவதால் அதை அனுமதிக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டது.

அநாதையான அந்தப் பெண்ணையும் அவளுடைய குழந்தையையும் ஆயுள் முழுக்க பராமரிக்க தொண்டு நிறுவனங்கள் முன்வந்திருப்பதை உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. அரசோ அல்லது தேசிய மன வளர்ச்சி குன்றியோர் வாரியமோ இதற்குப் பொறுப்பேற்கவேண்டும் என்று நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள்.

மன வளர்ச்சி இல்லாத ஒரு பெண் தன் சார்பாக ஒரு முடிவு எடுக்க எப்படி அனுமதிக்கலாம் என்பதே இந்த தீர்ப்பு பற்றிய சர்ச்சையில் முக்கியமான அம்சமாகும். மனவளர்ச்சி குன்றியவர்களின் உரிமைகளுக்காக செயல்படும் தொண்டு நிறுவனங்கள், இந்தத் தீர்ப்பை வரவேற்கின்றன. மனவளர்ச்சி குன்றியவர்களும் தங்களுக்கான முடிவுகளை சில விஷயங்களில் எடுக்கும் உரிமை உடையவர்கள் என்பதை முதல் முறையாக இந்தத் தீர்ப்பு அளித்திருப்பதாக அவர்கள் பாராட்டுகிறார்கள்.

கீழ் கோர்ட்டிலும் மேல் கோர்ட்டிலும் வழக்கு படு வேகமாக விசாரிக்கப்பட்ட போதிலும் , வழக்கு விசாரணை முடிவதற்குள் கருவின் வயது 20 வாரங்களை நெருங்கிவிட்டதால், கருச்சிதைவு செய்வது ஆபத்தானது என்ற நிலையும் வந்துவிட்டது.

பிறக்கப்போகும் குழந்தையும் மன வளர்ச்சி குன்றியதாக இருக்குமானால், தொண்டு நிறுவனங்கள் என்ன செய்யப்போகின்றன ? ஏழு வயது மன நிலையில் இருக்கும் ஒரு பெண் குழந்தை பெற விரும்பினால் அது விளையாட ஒரு பொம்மைக்கு ஆசைப்படுவது போலவே ஒழிய, குழந்தை வளர்ப்பின் முழு பரிமாணமும் உணர்ந்த அறிவுடன் அல்ல. இவையெல்லாம்தான் மறுதரப்பு வாதங்கள்.

நீதிமன்ற வாதங்களில் உதிர்ந்த ஒரு முத்து இதோ: குழந்தையை வளர்க்கும் ஆற்றலும் தகுதியும் வசதியும் தாய்க்கு இல்லை என்பதால் கருச்சிதைவு செய்யவேண்டும் என்றால், இந்த நாட்டில் கோடானுகோடி ஏழைப் பெண்களுக்குக் கூட வசதி இல்லை என்பதால் அவர்கள் குழந்தை பெறுவதைத் தடை செய்வீர்களா ?

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? 1. இனி செய்ய ஒன்றும் இல்லை என்ற நிலையில் முதியவர்களை உண்ணா நோன்போ வேறு ஏதோ இருந்து சாக அனுமதிக்கலாமா? 2. தசை சிதைவு போல குணப்படுத்த முடியாதா நோயுள்ள சிறுவர்களைக் கொல்ல அனுமதிக்கலாமா? 3. மன வளர்ச்சி இல்லாத பெண்ணைக் குழந்தை பெற அனுமதிக்கலாமா?

வாழ்வை விட மரணம் அதிக சிக்கல்களுடையதாகிக் கொண்டிருக்கிறது.

திட்டு:

கேரளம் தமிழ் நடிகை ஸ்ரீவித்யா மரணமடைந்ததும் அரசு மரியாதை வழங்கியது. தமிழக அரசு கண்டுகொள்ளவே இல்லை. கூத்துக் கலைஞர் புரிசை கண்ணப்ப தம்பிரான், கர்நாடக இசைக் கலைஞர் டி.கே.பட்டம்மாள் மறைவுகளையும் தமிழக அரசு கண்டுகொள்ளவே இல்லை. கூட்டணி அரசியல்வாதி என்பதற்காக ஆந்திர முதல்வர் ராஜசேகர் ரெட்டி மறைவுக்குத் தேவையில்லாமல் தமிழகத்தில் துக்க விடுமுறை அளித்த தி.மு.க.அரசுக்கு இ.வா.திட்டு.

7.9.2009